# அமெரிக்க இலங்கை மிஷன்

( 1816 — 1966 )

150 ஆம் ஆண்டு நிறைவு விழா

## நினைவு மலர்

செப்ரெம்பர் மாதம் 26 — 28, 1966.

# அமெரிக்க இலங்கை மிஷன்

( 1816 — 1966 )

★

## 150 ஆம் ஆண்டு நிறைவு விழா

# நினைவு மலர்

செப்ரெம்பர் மாதம் 26 — 28, 1966.

## ஐக்கிய சபையின் உலகவூழியக் குழு

( The United Church Board for World Ministries )

செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி 1966.

இலங்கை அமெரிக்கன் மிஷன் 150 ஆம் ஆண்டு நிறைவு விழா நடக்கும்பொழுது உங்களுக்கு வாழ்த்துதல் கூறி எழுதுவது எனக்கு அதிகம் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

உங்கள் மிஷனைப் பல வருடங்களுக்குமுன் தொடக்குவதற்குக் காலாயிருந்த அமெரிக்கன் போட் சங்கத்தின் வேலையை இப்போ செய்கிற உலக ஊழியக் குழு உங்களுக்கு அனுப்பியிருக்கும் செய்தியோடு நானும் இதை எழுதுகிறேன். கடந்த காலங்களில் உவ்விடம் ஊழியம் செய்த சுதேசிகளும், அமெரிக்கருமாகிய எத்தனை பெரியார் இத்தருணம் மனதில் வருகின்றனர். அவர்கள் ஊழியத்தைக் கடவுள் ஆசீர்வதித்ததற்காக அவருக்கு நாம் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

உங்கள் சந்தோஷ வைபவங்களில் நானும் வந்து பங்குபற்றவியலாதது எனக்கு விசனம். ஆகிலும் திரு. ஹாறல்ட் பெல்ச்சரும், மனைவியரும், திருமதி டெல்பர் மூக்கும் எங்கள் பிரதிநிதிகளாயிருந்து எங்கள் சோபனங்களை உங்களுக்குக் கூறுவர்.

வரும் 150 வருடங்களும், அதற்கு அப்பால் வரும் வருடங்களும் கடந்த 150 வருடங்களிலும் பார்க்க இன்னும் அதிக ஆசீர்வாதம் நிறைந்தனவாயிருப்பதாக.

**அல்போட் கால்டன்**
உலகவூழியக்குழு
உபநிர்வாக அக்கிராசனர்



வைக்கோற் பட்டடை நிலையத்தில்
ஞாபகசின்னம்



"கரவன்" கப்பல் சேலேமிலிருந்து
1812 இல் புறப்படுதல்

# அமெரிக்க இலங்கை மிஷன்

காற்று அடித்து மழை பெய்து கொண்டிருக்கும் ஓர் இரவு 1806 ஆம் ஆண்டு அமெரிக்கா தேசத்தில் மசாச்சுசெற்ஸ் மாகாணத்தில் உவில்லியம்ஸ் கல்லூரியென்னும் உயர்தரக் கலாசாலையில் கல்வி கற்று வந்த ஐந்து மாணவர் தாம் செபிக்கும்படி ஒரு வைக்கோற் பட்டடையின்கீழ்க் கூடினர். மின்னலும் இடிமுழக்கமும் வெளியே நடக்கப் பிறதேசங்களுக்குச் சுவிசேஷம் கொண்டுபோகப் படவேண்டியது அவசியமென அவர்கள் தீர்த்தனர். அவர்கள் பெயர்கள் பின்வருமாறு: சாமுவேல் மில்ஸ், ஜேம்ஸ் றிச்சேட்ஸ், எல். றொபின்ஸ், ஏச். லூமிஸ், பீ. கிறீன். இவர்கள் செபித்த இடத்தைக் காட்டும் ஞாபகசின்னத்தின் படம் எதிர்ப்பக்கத்தில் தரப்பட்டிருக்கிறது. பிற்பாடு இவர்களில் ஒருவராகிய மில்ஸ் அன்டோவர் தெய்வியற் கழகத்தில் கற்று வரும் பொழுது வேறு மூவருடன் தம் சபைப் பெரியோரின் முன்னிலையில் இவ் விஷயத்தைப் பணிக்க வேண்டுமெனத் தீர்மானித்து, 1816 ஆம் ஆண்டு பிராட்போட் நகரத்தில்கூடிய கொங்கிறிகேஷனல் சங்கத்திற்குத் தம் கருத்தை வெளியிட்டு மனுச் செய்தனர். இதன்பெறுபேறாக அமெரிக்கன் போட் சங்கம் நிறுவப்பட்டது.

முதன்முதலாக 1812 ஆம் ஆண்டு மூன்று குருமாரும், அவர்களில் ஒருவரின் மனைவியும் "ஹாமனி" என்னும் கப்பலில் பிலதெல்பியா என்னும் துறைமுகத்திலிருந்தும், வேறு மூன்று குருமாரும் அவர் மனைவியரும் "கரவன்" என்னும் கப்பலில் சாலேம் துறைமுகத்திலிருந்தும் புறப்பட்டு இந்தியாவுக்கு வந்தனர். "கரவன்" என்னும் கப்பல் புறப்படுவதை எதிர்ப்பக்கத்திலுள்ள இரண்டாம் படம் காட்டும். இவர்கள் கல்குத்தாவைச் சேர்ந்தபொழுது அங்குள்ள பிரித்தானிய மகா தேசாதிபதி, அவர்கள் ஊழியம் செய்வதற்குத் தடைசெய்தபடியால், அவர்களிற் சிலர் பர்மா தேசத்துக்கும் ஏனையோர் பம்பாய்க்கும் சென்றனர்.

இலங்கைக்கு வந்த மிஷனரிமார் பின்வருவோர்: ஜேம்ஸ் றிச்சேட்ஸ், தானியேல் பூர், பி. சி. மைக்ஸ், எச் பார்ட்வெல், எட்வேட் உவாறன் என்போரும் முதல் மூவரின் மனைவிமாரும். றிச்சேட்ஸ் 1806 ஆம் ஆண்டு வைக்கோற் பட்டடையின் கீழ்ச்செபித்த வாலிபரில் ஒருவரெனக் கவனிக்

கலாம், இவர்கள் 1815 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் திகதி நியூபெரி போட் என்னும் துறைமுகத்தி லிருந்து புறப்பட்டு 1816 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி கொழும்பு நகரையடைந்தனர். சில மாதங்களின்பின் பார்ட்வெல்லும் மனைவியும் பம்பாயில் நடந்துகொண்டுவரும் ஊழியத்தைப் பெலப்படுத்துவதற்கு அங்கு அனுப்பப்பட, ஏனையோர் யாழ்ப்பாண நகரத்துக்கு வந்தனர்.

பூர் ஐயரும் மனைவியும், உவாறனும் அக்டோபர் 15 ஆம் திகதி தெல்லிப்பழையில் வந்து குடியேறினர், றிச்சேட் ஐயரும் மைக்ஸ் ஐயரும் வட்டுக்கோட்டையிலிருந்த வீடு திருத்தப்படும்வரை யாழ்ப்பாண நகரத்தில் தங்கியிருந்து பின் வட்டுக்கோட்டையில் குடியேறினர். இங்குவந்த ஐவ ரில் உவாறன் ஐயர் புறப்படமுன்னரே நோயாளியாய் வந்து விட்டனர். வரும்பொழுது அவருடைய கயரோகம் றிச்சேட்ஸ் ஐயருக்கும் தொற்றியது. உவாறன் ஐயர் சுகம் பெற 1818 இல் நன்னம்பிக்கை முனைக்குப் போய் அங்கு மரித்து அடக்கம்பண்ணப்பட்டனர். றிச்சேட்ஸ் ஐயர் 1822 ஆம் ஆண்டில் மரித்து தெல்லிப்பழையில் அடக்கம் பண்ணப்பட்டிருக்கின்றனர்; இவருடைய கல்லறை எதிர்ப் பக்கத்தில் காட்டப்பட்டிருக்கிறது. அப்படத்தின்கீழ் உள்ளது பூர் ஐயருடைய படம். இவர் பல்லாண்டுகள் சீவித்துப் பெரிய காரியங்களைச் செய்து முடித்தனர். 1855 இல் பேதி நோயின் காரணமாக மரித்தார். இவரும் தெல்லிப் பழையில் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறார். இவருடைய கல் லறை றிச்சேட்ஸ் ஐயருடயதின் பின்னாகக் காணலாம்.

கல்வி முயற்சிகள், வைத்திய சேவை, பல்வகை இலக்கிய வெளியீடுகளுக்கூடாகவே கிறிஸ்த சுவிசேஷத்திற்குச் சுவை யூட்டலாமென மிஷனரிமார் பூரணமாய் நம்பினர். ஆகவே 1818 ஆம் ஆண்டில் 400 பிள்ளைகளைப் பயிற்றும் பன்னிரு பாடசாலைகளை அவர்கள் நிறுவிவிட்டனர். அடுத்த வருடம் 633 மாணவரைப் பயிற்றும் 15 பள்ளிக்கூடங்கள் இருந் தன. இத்துடன் ஓர் அச்சகத்தையும் நிறுவ முயன்றனர்.

1819 ஆம் ஆண்டு நான்கு புதிய மிஷனரிமாரும் அவர் கள் மனைவியரும் வரலாயினர். அவர்கள் நாமங்களாவன: மைறன் உவின்ஸ்லோ, லேவி ஸ்போல்டிங், எச். உவூட்வட், யோவான் ஸ்கடர். இவர்களிற் பெரும்பாலானோர் பிற்பாடு இங்கு மாத்திரமன்று, இந்தியாவிலும் மிகவும் பெயர் பெற்றனர்.



தெல்லிப்பளையில்
யேம்ஸ் றிச்சேட்ஸ் உடைய கல்லறை



தானியேல் பூர் ஐயர்

மேல்நாடுகளிலிருந்து கிழைத் தேசங்களுக்கு வந்த மிஷனரிமாருள் வைத்திய கலைப்பயிற்சியுடன் முதன் முதலாக வந்தவர் யோவான் ஸ்கடர் என்பவரே. இவர் பண்டத்தரிப்பில் ஒரு மருத்துவ சாலையை ஸ்தாபித்தனர். இத்துடன் கிறிஸ்தவ மிஷனரி இயக்கத்தில் வைத்திய சேவை ஒரு திட்டமான அம்சமாய் வந்துள்ளது. 1832 இல் இதற்காக ஒரு பிரத்தியேகமான கட்டிடத்தை நிறுவினர். இதை இன்னும் யாரும் காணலாம். 1836 இல் யாழ்ப்பாண மிஷன் சென்னைபட்டினத்தில் ஒரு மிஷன் தாபிக்க விரும்பிய போது உவின்ஸ்லோ ஐயருடன் இவர் அங்கு மாற்றப்பட்டனர். அங்கிருந்து அவர் ஆட்கட் ஜில்லாவுக்குப் போய் ஆட்கட் மிஷன் நிறுவப்படுவதற்குக் கருவியா யிருந்தனர். வேலூரில் இப்போ இருக்கும் மாபெரும் வைத்திய சாலையும் அத்துடன் சேர்ந்துள்ள வைத்திய கலைக்கழகமும் ஸ்கடர் ஐயரின் குடும்பத்தினர் மூன்று சந்ததியாய்ச் செய்துள்ள பெரிய வைத்தியசேவைக்கு அத்தாட்சி. ஸ்கடர் ஐயரையும், மனைவியையும் காட்டும் படத்தை எதிர்ப்பக்கத்திற் காண்க

உவின்சிலோ ஐயரும் மனைவியும் உடுவிலிலே வசித்தனர் இவர் தமிழ்ப் பாஷையை அதிகம் கற்றறிந்தவர். பிற்காலம் இவர் இந்தியாவுக்குப் போக வேண்டியிருந்தது. அங்கு மற்றைய வேலைகளுடன் சென்னைக்கு அருகாமையில், இராயபுரத்தில் ஒரு பெரிய அச்சகத்தை நிறுவி, அதன் வேலையை மேற்பார்வையிட்டு வந்தார். 1862 இல் 60,000 சொற்கள் அடங்கிய ஒரு மாபெரும் அகராதியை வெளியிட்டனர். இந்நூல் அறிஞருக்குள் இன்றும் உபயோகத்தில் உள்ளது. இவர் மரித்தது 1864 இல்.

தமிழ்க் கலாசாலைகளை மிஷன் நிறுவிவருங்கால், ஆங்கில கலையைப் பாராமுகமாய் விடவியலாதென உணர்ந்தது. ஆகவே, தெல்லிப்பழையிலும், வட்டுக்கோட்டையிலும் ஒவ்வொரு ஆங்கில கலாசாலையைத் தொடக்கினரெனினும், நாட்டின் கல்வித் தேவைகளைச் சிறிய பாடசாலைகளினால் நிவிர்த்தி செய்ய இயலாதென உணர்ந்தது. ஆனதுபற்றி ஆண்களுக்கொன்றும் பெண்களுக் கொன்றுமாக இரு மாவித்தியா சாலைகளைத் தாபிக்க மிஷன் தீர்மானித்தது.

ஆண்கள் வித்தியாசாலை பட்டங்கள் அளிக்கும் ஓர் உயர் தரக் கழகமாய் இருக்க வேண்டுமென்று கருதப்பட்டது. ஆகவே அதன் பாடத்திட்டம் சம்ஸ்கிருதம், கிரேக்க–லத்தீன் பாஷைகளையும், கணித, தர்க்க, வான, தத்துவக் கலைகளையும் அடக்கியிருந்தது. இவ் வித்தியாசாலை வட்டுக்

கோட்டையில் 1823 இல் ஸ்தாபிக்கப்பட்டது. தானியேல் பூர் ஐயர் முதல் தலைவராக நியமிக்கப்பட்டார். அரசினர் பட்டங் கொடுக்கும் உரித்தை அளிக்காதபடியால், வித்தியா சாலை "கல்லூரி" என அழைக்கப்படாமல் "செமினரி" என அழைக்கப்பட்டது.

இச்செமினரி இருந்த காலத்தில் மிகக் கீர்த்தி பெற்றது. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும், தென் இந்தியாவிலிருந்தும், கலை பயிலப் பல மாணவர் வந்தனர். பிற்காலங்களிற் பெரிய கல்விமான்களாய் விளங்கிய ஆர்னேல்ட் சதாசிவம்பிள்ளை, உவில்லியம் நெவின்ஸ், சி. வை. தாமோதரம்பிள்ளை, கரோல் விசுவநாதன், எவாட்ஸ் கனகசபைப் பிள்ளை, உவைமன் கதிரவேற்பிள்ளை முதலியோர் இங்கு கற்று அரங்கேறியவர். எச். ஆர். கோசிங்ரன் ஐயர் தலைவராய் இருக்கும் பொழுதே செமினரி அதிகம் உயர்ந்த நிலை அடைந்தது. இவர் விடுதலைக்கு அமெரிக்காவுக்குப் போயிருந்த காலம் தவிர, 1836 தொடக்கம் 1849 வரை அதற்குத் தலைவராயிருந்தனர். இவர் வானசாஸ்திரம் தொடங்கி இந்து சமய சாஸ்திரங்கள் வரை பல்வேறு கலைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவர். இவருடைய படம் எதிர்ப்பக்கத்திற் பொறிக்கப்பட்டுளது. இவருடைய காலத்திற் செமினரியைச் சந்தித்த சேர். எமேர்சன் ரெனன்ற் என்னும் இலங்கை உப-தேசாதிபதி இச்செமினரி ஐரோப்பாவிலுள்ள எந்தப் பல்கலைக் கழகத்திற்குச் சமானமானதெனப் பாராட்டுரைத்தனர்.

பெண்களுக்கென நிறுவப்பட்ட வித்தியாசாலை உவின்ஸ்லோ அம்மாளால் 1824 இல் உடுவிலில் ஏற்படுத்தப்பட்டது. இவவுடைய படத்தை எதிர்ப்பக்கத்திற் காண்க அக்காலம் பெண்கள் கல்வி கற்பது அவசியமற்றதென நாட்டில் எண்ணப்பட்டபடியால், ஆண்களை விடுதிப் பாடசாலைக்குட் கொண்டுவந்து சேர்ப்பதிலும், பெண்களைக் கொண்டு வருவது மிகக் கஷ்டமாயிருந்தது. பீ. சீ. மைக்ஸ் ஐயர் தான் யாழ்ப்பாணத்திற் சுற்றித் திரிந்தபொழுது அளவெட்டியிலும், உடுப்பிட்டியிலும் மாத்திரம் தமிழ் வாசிக்க ஒவ்வொரு பெண்ணைக் கண்டதாகக் குறித்திருக்கிறார். விடுதிப்பாடசாலைக்குள் வருவதால் பெண்பிள்ளைகள் நாட்டு வழக்கத்தைக் கைவிடுவது மாத்திரமல்ல, தமது சாதிமரபைவிட்டு விலகியவருமாவரெனப் பெற்றோருக்குக் காணப்பட்டனர். ஆகவே வந்தவர்க்கு மிஷனரிமார் இனமாகக் கல்வியூட்டி, உணவளித்தது மாத்திரமல்ல, அவர் ஸ்திரீதனத்தையும் தாமே கொடுக்கவேண்டியிருந்தது.



எச். ஆர். ஹோசிங்ரன்
( செமினரித் தலைவர் )



உடுவிற் பாடசாலையை நிறுவிய
உவின்ஸ்லோ அம்மையார்



உடுவில் பள்ளிக்கூட
அக்நீயு அம்மான்

உவின்ஸ்லோ அம்மாள் 1833 இல் இறந்தனர். 1839 இல் லீசா அக்னீயு அம்மாள் வரும்வரை ஸ்போல்ட்டிங் ஐயரும் அம்மாளுமே பள்ளிக்கூடத்தை மேற்பார்வையிட்டு வந்தனர். அக்னீயு அம்மாள் ஏறத்தாள 40 வருடங்களாய் உடுவிற் பாடசாலைக்குத் தலைவியாக இருந்து அதை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தனர். அன்னாரின் உருவப்படத்தையும் எதிர்ப்பக்கத்திற் காண்க.

1824 இல் மிஷன் செமினரியையும், உடுவிற் பெண் பாடசாலையையும் மாத்திரமல்ல, 2,864 பிள்ளைகளைப் படிப்பிக்கும் 90 தமிழ்ப் பள்ளிக்கூடங்களையும் நடத்தி வந்தது. அரசினர் பல வருடங்களாய் ஓர் உதவியும் அளிக்கவில்லை; ஆகிலும் 1837 ஆம் ஆண்டு தொடக்கம் வருடாவீதம் 200 பவுண் கொடுத்து வந்தனர்.

பள்ளிக்கூடங்கள் சிறுவர்களுக்கேயுரியன. வளர்ந்தோருக்கு எப்படிச் சுவிசேஷத்தைக் கொண்டு செல்லலாம் என்னும் பிரச்சினையை மிஷன் சிந்தித்து அவர்களுக்காகப் பலவகை நூல்களை வெளியிடவேண்டுமென உணர்ந்து, இதற்காக 1820 இல் ஓர் அச்சியந்திரத்தையும், அதை இயக்குவதற்கு ஒரு நிபுணரையும் அமெரிக்காவிலிருந்து வருவித்திருந்தது. ஆனால் இவர் மூன்று மாதங்களுக்குள் நாட்டைவிட்டகல வேண்டுமென அரசினர் கட்டளை பிறப்பித்திருந்தபடியால் அச்சகம் நல்லூரிலிருந்த ஆங்கிலேய மிஷனரிமாருக்கு விற்கப்பட்டிருந்தது. 1831 இல் மிஷன் ஊழியத்திற்குச் சார்பாயிருந்த ஒரு தேசாதிபதி ஆளுகை செலுத்தத் தொடங்கியிருந்தபடியால் 1834 இல் அச்சகம் திரும்ப வாங்கப்பட்டு மானிப்பாயில் நிறுவப்பட்டது. இதன் நிலையம் மிஷன் வளவில் நூற்றாண்டு நிறைவு காலத்தில் கட்டப்பட்ட கட்டடத்திற்குத் தெற்கேயிருந்தது. இங்கிருந்து அனேக நூல்கள் ஒழுங்காய்ப் பிறந்துகொண்டிருந்தன. ஓர் இயந்திரம் போதாதபடியால், மிஷனரிமார் இன்னும் வேறு இயந்திரங்கள் வாங்கினர். 1838 இல் இவ் வச்சகத்தில் 81 ஆட்கள் வேலை புரிந்தனர்; 1840 இல் மானிப்பாய் அச்சகத்தில் நாலு அச்சியந்திரங்கள் இருந்தன.

1831 வரை அமெரிக்கன் மிஷன் கிறிஸ்தவர் எல்லோரும் எங்கிருந்தாலும், ஆராதித்தாலும், வட்டுக்கோட்டைச் சபை அங்கத்தினராயிருந்தனர். அக்காலம் எல்லாக் கிறிஸ்தவருடைய தொகையும் 192. இவ்வாண்டில் ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் இனி ஐந்து சபைகள் இருப்ப

தாகப் பாராட்டி, பின்வரும் சபைகளுக்கு அவையுடன் குறிக்கப்பட்டுள்ள தொகையினரின் நாமங்கள் மாற்றப் பட்டன: வட்டுக்கோட்டை — 69; உடுவில் — 49; தெல்லிப் பளை — 29; மானிப்பாய் — 24; பண்டத்தரிப்பு — 21. அவ் வவ் ஸ்தானங்களிலிருந்த மிஷனரிமார் ஆங்காங்கு குருத் துவ ஊழியம் புரிந்தனர். சபைகளின் ஆவிக்குரிய நல் வாழ்வை வளர்க்க, "கொன்சோசியேஷன்" (கூட்டுறவு) என்னும் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு, 1838 இல் அதன் பெயர் "பிறெஸ்பிற்றறி" (மூப்பர் சங்கம்) என்று மாற்றப்பட் டது.

யாழ்ப்பாண மிஷன் ஒரு மிகச்சிறிய கூட்டத்தினரைக் கொண்டிருந்தது. எனினும் அது மிகப் பெரிய காரியங்க ளைத் துணிந்து நடத்தக்கூடிய வாஞ்சை கொண்டிருந்தது. யாழ்ப்பாண மிஷன் ஸ்தாபிக்கப்பட முன்னரே, பம்பாய்க் குச் சமீபத்தில் ஒரு மிஷனை 'அமெரிக்கன் போட்' ஸ்தா பித்திருந்தது. ஆனால் தென்னிந்தியாவில் அமெரிக்கன் போட் டுக்குரிய ஒரு மிஷனும் இருக்கவில்லை. இதை நிவிர்த்தி பண்ண 1834 இல் யாழ்ப்பாண மிஷன் பூர் ஐயரை இந்தி யாவுக்கு அனுப்பினது. அவர் மதுரை மிஷனை ஸ்தாபித்து அங்கு ஏழு வருடம் செலவழித்து யாழ்ப்பாணம் திரும்பி னர். 1836 இல் சென்னை பட்டணத்திலும் அப்படியே ஒன்றை ஸ்தாபிக்கவேண்டுமெனத் தீர்மானித்து உவின்ஸ் லோ ஐயரையும், ஸ்கடர் ஐயரையும், அங்கு அனுப் பினது. உவின்ஸ்லோ ஐயர் 1864 இல் காலம் சென்றதும், சென்னை மிஷன் மூடப்பட வேண்டியதாயிற்று. ஆகிலும் ஸ்கடர் ஐயர் ஆட்கட் ஜில்லாவுக்குட் புகுந்து ஊழியம் செய்ததனால் ஆட்கட் மிஷன் பிறந்தது. இம்மிஷன் பிற் பாடு, "அமெரிக்க டச் றிபோம்ட்" சங்கத்திற்கு மாற்றப் பட்டது.

1840 ஆம் ஆண்டு தொடக்கம் அடுத்த பத்து வருடங் களில் நடந்த மூன்று முக்கியமான சம்பவங்களை இங்குக் குறிப்பிடலாம்.

(1) மார்க்க விஷயங்களைப் பற்றி மாத்திரமன்று ஏனைய விஷயங்களையும் எடுத்துப் பாராட்டி வாரந்தோறும் வெளிவரும் "உதயதாரகை" என்ற ஒரு பத்திரிகையை 1841 இல் மிஷன் தொடங்கியது. இது ஆங்கிலம் தமிழ் என்னும் இரண்டு பாஷைகளையும் உபயோகித் தது.



மானிப்பாய் வைத்தியசாலையை நிறுவிய
கிறீன் ஐயர்



லேவி ஸ்போல்டிங் ஐயரும் அம்மாளும்

(2) 1847 இல் சாமுவேல் பிஸ்க் கிறீன் ஐயர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து, சீக்கிரத்தில் வைத்திய வேலையை மானிப்பாய்க்குக் கொண்டுபோய் அங்கு ஒரு வைத்திய சாலையை ஸ்தாபித்தார். இவர் பிற்பாடு வைத்திய கலையை மாணவருக்கூட்டியதுடன், அக்காலம் நிலவிய விசேஷ வைத்திய கலை நூல்களையும் தமிழாக்கஞ் செய்வித்தனர்.

(3) இவ் வருடங்களில் நமது வேதத்தை நல்ல தமிழில் திருப்புவதில் யாழ்ப்பாணக் கிளை வேதாகம சங்கம் உழைத்தது. வேதாகம சங்கம் வேதத் திருப்புதலில் ஈடுபட்ட பின் இதுவே யாழ்ப்பாணத்தில் இயற்றப் பட்ட ஒரேயொரு திருப்புதல். இதில் தமிழ்ப் பெரியாராகிய ஆறுமுக நாவலரும் உழைத்தனர். பீற்றர் பர்சிவல் என்னும் மெதடிஸ்த மிஷனரியே இதன் முக்கிய மொழிபெயர்ப்பாளரு யிருந்த போதிலும் யாழ்ப்பாணக் கிளைச்சங்கத்திறகுப் பல வருடங்களாய் ஸ்போல்டிங் ஐயரே தலைவராயிருந்தனர்.

ஸ்போல்ட்டிங் ஐயர் பல ஞானப்பாட்டுக்களை மொழி பெயர்த்து, பல துண்டுப் பிரசுரங்களையும் எழுதியவர், இவர் இரண்டு தமிழ் - ஆங்கில அகராதிகளை வெளியிட்டவர். யாழ்ப்பாணத் திருப்புதல் தள்ளி வைக்கப்பட்டு. இப்போது உபயோகத்திலிருக்கும் திருப்புல் இயற்றப்படுங் காலத்தில் சென்னை வேதாகம சங்கத்திற்கு ஐயரவர்கள் அதிகம் உதவி புரிந்தனர். தற்போது உடுவில் மகளிர் கல்லூரித் தலைவருடைய காரியாலயத்தையே இவரும் தன்னுடைய வேலைகளைநடாத்தும் அலுவலகமாக கொண்டிருந்தார். இவரே பத்தொன்பதாம் நூற்றூண்டில் யாழ்ப்பாணம் வந்த எல்லா மிஷனரிமாரிலும் பெரியவராகக் கணிக்கப்படலாம். ஸ்போல்ட்டிங் ஐயர் அம்மா அவர்களின் படத்தை எதிர்ப் பக்கத்திற் காண்க.

மிஷனரிமார் புறப்பட்டுப் பல வருடங்களாய்ப் பல நாடுகளில் ஊழியம் செய்திருந்தனர். அவர்கள் ஊழியத்தைச் சீர்தூக்குமாறு முதல்முறையாக அமெரிக்கன் போட்டிலிருந்து தானுதிபதிகள் 1855 இல் வந்தனர். அவர்கள் தலைவன் றூபஸ் அன்டேர்சன் பண்டிதர். இவ் ஸ்தானுபதிகள் யாழ்ப்பாண வேலை முறை முற்றூய் மாற்றப்பட வேண்டுமென்று சிபார்சு செய்தனர். அதன்படி செமினரி மூடப்பட்டு அதற்குப் பதிலாகத் தமிழ் ஆசிரியரைப் பயிற்ற ஒரு கலாசாலை நிறுவப்பட்டது. உதயதாரகையும், அச்சகமும் ஒரு கிறிஸ்த குடும்பத்திற்கு விற்கப்பட்டது.

எல்லா ஆங்கிலக் கல்வியும் நிறுத்தப்பட்டது; உடுவிற் பெண் பாடசாலையில் பயிற்றப்பட்ட மாணவர் தொகை குறைக்கப்பட்டது.

எனினும் தற்காலம் வற்புறுத்தப்படும் ஓர் அபிப்பிராயத்தை அக்காலம் தானுபதிகள் வற்புறுத்தினர். அதாவது சுதேச சபைகள் சுதேசமயமாயிருக்க வேண்டும்; வெளி உதவியில் அதிகம் தங்கியிருக்கப்படாது என்பது. இது எப்படி விசேஷித்த ஆலோசனையாயிருந்தும் அதை உடனடியாய்க் கிரியை முறையில் கொண்டுவர முயன்றதே ஸ்தானுபதிகளின் தப்பிதம். சபைகள் சுதேசமயமடைய வேண்டுமென அவர் வற்புறுத்தியதன் பெறுபேறுக சுதேச ஊழியரை அபிஷேகம்பண்ண முதல்முறையாக மிஷன் தொடங்கியது. அதே வருடத்தில் எம். கொர்னேலியுவும், ரி. பி. ஹன்றும் அபிஷேகம் பெற்றனர். இக்காலத்தில் இன்னும் மூன்று சபைகள் அங்கீகரிக்கப்பட்டுவிட்டன. அவையாவன சாவகச்சேரி (1837), உடுப்பிட்டி (1847), காரைநகர் (1855).

1866 இல் மிஷன் தனது 50 ஆம் ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடியது முக்கியமான கூட்டம் மே மாதம் 24 ஆம் திகதி வட்டுக்கோட்டையில் நடந்தது. ஸ்தானுபதிகளின் சிபாரிசை இன்னும் வலியுறுத்தும் நோக்கமாய்க் குருமாரும், சபைப் பிரதிஸ்தரும் அங்கத்தவராயிருக்கக் கூடிய "சபாசங்கம்" என்னும் ஒரு சமாசம் ஏற்படுத்தப்பட்டது.

மிஷனரிமார் ஸ்தானுபதிகளின் கருத்துக்களை மதித்தாரன்று; நாட்டு மக்களோ இன்னும் அதிகமாய் அவைகளை வெறுத்தனர். ஆகவே 1867 இல் வட்டுக்கோட்டையில் அவர்கள் ஒரு பகிரங்கக் கூட்டம் கூடி யாழ்ப்பாணக் கல்லூரி என்னும் பேர்கொண்ட ஓர் உயர்தரக் கலாசாலை தொடங்கப்பட வேண்டுமெனவும், அதற்குப் பணம் இங்கேயே தேடவேண்டுமெனவும், எனினும் தலைவரை மிஷனே கொடுத்துதவ வேண்டுமெனவும் தீர்மானித்தனர். ஈற்றில் இங்கு பணம் அதிகம் சேராத படியால் அமெரிக்காவில் இருந்தே வரவேண்டியிருந்தது. ஆகிலும் ஆளுகைச் சங்கம் அங்கல்ல, இங்கேயே இருக்கவேண்டுமென விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கல்லூரியைத் தொடக்க வேண்டிய ஏற்பாடுகளை எடுத்தது நாட்டு மக்கள். ஸ்தானுபதிகளின் சிபாரிசுகளை மிஷனரிமார் நேர்நேராக மீறவியலாதிருந்தபடியால் அது விஷயத்தில் கவனமாகவும் மெல்லினமாகவுமே சென்



ஈ. பீ. ஹேஸ்டிங்ஸ் பண்டிதர்
( 1847 — 1890 மிஷனரி )



கேர் அம்மாள்
( 1898 — 1938 இணுவில் தலைவி

றனர். 1879 ஆம் ஆண்டுவரை இரண்டு ஆங்கில பாடசாலைகள் மாத்திரமே நிறுவினர். ஆறல் 16 ஆங்கில—தமிழ்ப் பாடசாலைகளை நிறுவிவிட்டனர். தனித்தமிழ்ப் பாடசாலைகளைப்பற்றி ஸ்தாருபதிகள் அதிக கடினமாயிராதபடியால் அவைகளின் தொகை 121 இற்கு வந்தது.

1874 ஆம் ஆண்டில் ஸ்போல்டிங் ஐயர் இறந்தபின் யாழ்ப்பாணத்தில் ஊழியம் புரிந்த மிஷனரிமாருள் மிகப் பிரபலம் வாய்ந்தவர் கனம் ஈ. பீ. ஹேஸ்டிங்ஸ் பண்டிதர். இவர் 1847 இல் யாழ்ப்பாணம் வந்தார். செமினரியின் கடைசித் தலைவரும் யாழ்ப்பாணக் கல்லூரியின் முதல் தலைவரும் இவரே. இருமுறை அமெரிக்கா தேசத்திற்கு ஜனாதிபதியாயிருந்த குரோவர் கிலீவ்லன்ட் என்பவரின் சகோதரி இவர் மனைவி. ஹேஸ்ட்டிங்ஸ் ஐயருடைய படம் எதிர்ப் பக்கத்திற் • தரப்பட்டுள்ளது. அக் காலங்களில் உழைத்த ஏனைய மிஷனரிமாரிற்பெரியார் டபிள்யு. டபிள்யு. ஹவுலந்தும், அவருடைய மகன் சாமுவேல் ஹவுலந்தும், சகோதரிமாராகிய லீச் அம்மாமாரும். 1892 ஆம் ஆண்டு டக்றர் ஸ்கொற்றும் மனைவியரும மானிப்பாய் வைத்திய சாலைப் பொறுப்பை யேற்றனர்.

லீச் அம்மாமாரின் முயற்சியினல் 1898 ஆம் ஆண்டில் பிரத்தியேகமாய் ஸ்திரீகளுக்கும், பிள்ளைகளுக்கும் வைத்தியம் செய்யும்படி இணுவிலில் ஒரு வைத்தியசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இதன் பொறுப்பை 1898 இல் ஏற்றுக் கொண்ட இசபெல்லா கேர் அம்மா 1938 வரையும் சேவை புரிந்தனர். அவவுடை படத்தையும் எதிர்ப்பக்கத்திற் காண்க.

யாழ்ப்பாண மிஷன் சிறியதாயினும் எப்படித் தன்னிலும் பெரிய ஊழிய இயக்கங்களைத் தொடக்கி விடக் கூடிய கருவியாயிருந்ததென மதுரை, ஆர்க்காட் மிஷன்கள் விஷயமாகக் கண்டோம். இந்த நூற்றாண்டு பிறந்த

காலத்தில் நடந்த நிகழ்ச்சிகள் இவைகளிலும் பெரிய தொன்று உற்பத்தியாவதற்கு ஏதுவாயிருந்தது. 1898 தொட்டு யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர் தென்னந்தியாவில் தொண்டி என்னும் ஒரு கிராமத்தில் சுவிசேஷ ஊழியம் செய்யுமாறு ஒரு சிறிய மிஷன் நடத்தி வந்தனர். 1902 இல் யாழ்ப்பாணம் வந்த திரு. வீ. எஸ். அசரியா யாழ்ப்பாண மாணவர் காட்டிய ஊக்கத்தைக் கண்டு ஆச்சரியமடைந்து, தனது சொந்த ஊருக்குப்போய் திருநெல்வேலியில் ஒரு மிஷனரிசங்கத்தை ஸ்தாபித்தனர். அச்சங்கம் தெலுங்கு நாட்டில் டோர்னக்கல் என்னும் இடத்தில் சுவிசேஷ வேலையை ஆரம்பித்தது. சிலகாலம் செல்ல அசரியா தானே அங்குப்போய் ஊழியத்தில் ஈடுபட்டு, தான் (1945 இல்) மரிக்கும்போது 250,000 கிறிஸ்தவர்களை விட்டுப் போயினர்.

1900 ஆம் வருடத்தில் சபாசங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட 19 சபைகள் இருந்தன. 19 அபிஷேகம் பண்ணப்பட்ட போதகர்மார் ஊழியம் செய்தனர். இவர்கள் ஒவ்வொருவரும் திட்டமான சபைகளுக்கே அபிஷேகம் பண்ணப்பட்டபடியால் பலவாண்டுகளுக்கு அதே சபைகளிலேயே இருந்தனர். உதாரணமாக, யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்விபயிற்றிய 8 வருடங்களைத்தவிர ஹன்றுப் போதகர் 1855 ஆம் வருடம் தொடக்கம் 1903 ஆம் வருடம் வரை சாவகச்சேரியிலும், ஸ்ரிக்னிப் போதகர் 1864 ஆம் ஆண்டு தொடக்கம் 1901 ஆம் ஆண்டுவரை உடுப்பிட்டியிலும், றைசுப்போதகர் 1867 ஆம் ஆண்டு தொடக்கம் 1905 ஆம் ஆண்டுவரை வட்டுக்கோட்டையிலும் ஊழியம் புரிந்தனர்.

1901 ஆம் ஆண்டில் அமெரிக்கன் போட் சங்கத்திலிருந்து இரண்டாம் தூதுக்கோஷ்டி ஜே. எல். பாட்டன் பண்டிதரின் தலைமையின்கீழ் யாழ்ப்பாணம் வந்தது. இக்கோஷ்டி மிஷன் வேலையில் இரண்டு முக்கியமான மாற்றங்கள்



ஜீ. ஜீ. பிறவுன் ஐயர்

( மிஷனரி 1899 — 1920 )

செய்தது: (1) அன்டேர்சன் தூதுவருடைய சிபாரிசு களை நிராகரித்து, ஸ்தாபனங்களை, விசேஷமாய் கல்வி ஸ்தாபனங்களை, வளர்க்க வேண்டுமென விதித்தனர். (2) சபை வேலைகளைப் பொறுப்பெடுக்க "இலங்கைக் கொங்கிறிகேஷனல் சங்கம்" என்னும் சமாசம் நிறுவப் பட வேண்டுமெனவும் ஒழுங்கு செய்தனர்.

இதில் இரண்டாவது ஒழுங்கு நல் நோக்கத்துடனே செய்யப்பட்டது. இச்சங்கம் நிறுவப்படுவதில் அதிகம் முயற்சியெடுத்தது இந்த நூற்றூண்டில் நமது மத்தியில் ஊழி யம் புரிந்த எல்லா மிஷனரிமாரிலும் பெரியவராகிய ஜீ. ஜீ. பிறவுன். அவருடைய படத்தை எதிர்ப்பக்கத்திற் காண்க. எனினும் இச்சங்கம் நிறுவப்பட்டதனுல் நன்மை ஏற்பட்டதோடு தீமையும் ஏற்பட்டது. நன்மை யாதெனில் மிஷனரிமாரின் மேற்பார்வையில்லாமல், சபைச் சீவியம் வளர்க்கப்படலாமென்பதும், அதன் பெறுபேருகச் சுதேசி கள் தமது அலுவல்களைத் தாங்களே நடாத்தப் பழகிக் கொள்வார்களென்பதும். அவ்வொழுங்கிலிருந்த நஷ்டம் யாதெனில் ஒன்ருயிருந்த கிறிஸ்த இயக்கம் இனி இரண் டாகப் பிரிக்கப்பட்டதும், அதன் பொருட்டு முன்வந்திருந்த மிஷனரிமார் நீங்க, அவர்கள்பின் வருவோர் சபைவேலை களில் கரிசனை காட்டார்களென்பதும்.'

அமெரிக்கமிஷனின் நூற்றூண்டுவிழா 1916 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரையும் வட்டுக்கோட்டையில் நடைபெற்றது. போட் சங்கத்திலிருந்து ஈ. எல். சிமித் பண்டிதரும், எவ். எச். உவாணர் என்போரும், அவர் மனைவிமாரும் பிரதிநிதிகளாய் வந்திருந்தனர். மலாய் நாட்டு யாழ்ப்பாணக் கிறிஸ்தவர்களும் ஒரு கோஷ்டியை அனுப்பியிருந்தனர். இலங்கையிலும், இந்தியாவின் பல பாகங்களிலும் உழைத்த மிஷன் சங்கங்களின் பிரதிநிதிகளும் சமுகமாயிருந்தனர்.

இக்கொண்டாட்டத்தின் ஒரு நிலையான பயன் யாதெனில், முந்திய பத்து வருடங்களாய்ச் சேகரிக்கப்பட்ட "சதாப்த நிதி" ரூபாய் 22,000 ஐ எட்டியது. இந்நிதி இன்னும் நமது நிலையான நிதிகளில் ஒன்று.

இக்காலங்களில் பழைய மிஷனரிமார் வரவர நீங்கினர். ஸ்கொற் ஐயரும், அம்மாளும் 1913 இல் சுயதேசம் போய் விட்டனர். டிக்சன் ஐயரும் அம்மாளும் 1918 இல் யாழ்ப்பாணத்தை விட்டுப்போய், பின் இந்தியாவில் ஊழியம் புரிந்தனர். பிறவுன் ஐயர் 1920 ஆம் ஆண்டு முதற்பகுதியில் இறந்தனர். ஹிச்சுக்க்காக் ஐயரும் அம்மாளும், பிறவுன் அம்மாவும் 1925 இல் சுயதேசம்போயினர். சூசின் ஹவுலண்ட் அம்மாளும் உடுவிலை விட்டுப் பலவருடங்களுக்குமுன் இளைப்பாறி, வேதாகம ஸ்திரீகள் வேலையை மேற்பார்வையிட்டிருந்தபின் 1930 இல் தனது 80 ஆம் வயதில் சொந்த நாட்டிற்குப் போயினர்.

1920 தொடக்கம் புதிய மிஷனரிமார் வந்து, வெவ வேறு ஸ்தாபனங்களின் பொறுப்பேற்று அவைகளை உன்னத நிலைக்கு உயர்த்தினர். ஹவுலண்ட் அம்மாள் 1913 ஆம் ஆண்டு உடுவிலிலிருந்து இளைப்பாற, புக்குவால்டர் அவவுடைய இடத்தையெடுத்து அக்கலாசாலையை மிகச்சிறக்கச் செய்தனர்; அவர் 1941 இல் இளைப்பாறி மருதனுமடத்திலுள்ள பெண்கள் நிலையத்தை நடத்தி வந்தனர். 1916 இல் கனம் யோவான் பிக்னெல் யாழ்ப்பாணக் கல்லூரித் தலைவராக வந்தனர்; இவர் கல்வி பயிற்றும் சாஸ்திரத்தில் நிபுணன்; பேச்சு விற்பன்னன்; நிர்வாகச் சக்தியிற் சிறந்தவர். இவர் 1936 வரை கல்லூரித் தலைவராயிருந்தனர். டக்டர் ஜேம்சன் ஐயர் 1923 இல் மானிப்பாய் வைத்தியசாலைக்குத் தலைவராய் வந்தனர்; இவர் ரண வைத்தியத்தில் மிகத் திறமைவாய்ந்தவர் மாத்திரமன்று, முன்நோக்கமும், தைரியமும் நிறைந்தவர். பிக்னல் ஐயருடைய இடத்தை கனம் எஸ். கே. பங்கர் எடுத்தனர். இவருடைய காலத்திற்



புக்வால்டர் அம்மா
( 1913 — 1941 உடுவில் தலைவி )



யோவான் பிக்னல் ஐயர்
( 1916 — 1936 யாழ்ப்பாணக் கல்லூரித் தலைவர் )



டபிள்யூ யேம்சன் ஐயர்
( 1923-- 1938 மானிப்பாய் வைத்தியசாலைத் தலைவர் )



எஸ். கே. பங்கர் ஐயர்
( யாழ்ப்பாணக் கல்லூரித் தலைவர் )



மிஷனின் முதலாம் சுதேச அக்கிராசனர்
திரு. ரீ. சி. இராசரத்தினம்

கல்லூரி திரும்பவும் பட்டத்திற்குப் பயிற்றும் கழகமாயினதாற் பலதுறைகளில் வளரவேண்டியிருந்தது. இம் மிஷனரிமாரின் படங்கள் எதிர்ப்பக்கத்திற் பொறிக்கப் பெற்றுளது.

இக்காலங்களில் மிஷன் அமைப்பில் மூன்று இழுக்குகள் இருந்தன. அவை யாவன: முதலாவதாக, தமது ஸ்தாபனங்களை நடத்திவந்த மிஷன்மிமாரிருந்தனரே யன்றி மிஷன் இருக்கவில்லை; இரண்டாவதாக, உலகத்தின் பல பாகங்களிலும் சுதேசிகள் பல துறைகளில் உயர்ந்த பதவியை யடைய, நமது மிஷனுக்கோ அவர்கள் புறம்பேயிருக்கவேண்டி யிருந்தது. மூன்றாவதாக ஒன்றாயிருக்க வேண்டிய மிஷனும், சபாசங்கமும் வெவ்வேறாய்க் கிரியை செய்தன.

1926 ஆம் ஆண்டில் றொக்வெல் ஹார் மன் பொற்றர் பண்டிதரின் கீழ் ஒரு தூதுக்கோஷடி வந்து, சுதேசிகள் மிஷனுக்குள் வருவது அவசியமென வலியுறுத்திய போதிலும், பல வருடங்களாய் இதையிட்டு எடுக்கப்பட்ட நடபடிக்கைகள் கைகூடவில்லை. ஈற்றில் 1938 இல் மிஷன் மாற்றி அமைக்கப்பட்டு திரு. ரீ. சீ. இராசரத்தினம் என்னும் ஒரு வழக்கறிஞர் மிஷன் தலைவராய் நியமிக்கப்பட்டனர். அவர் படத்தை எதிர்ப்பக்கத்திற் காண்க. நாலுவருடங்கள் செல்ல, எத்தனை மிஷனரிமாருளரோ அத்தனை சுதேசிகளும் மிஷன் சங்கத்திலிருக்குமாறு மிஷன் இன்னும் திருத்தி அமைக்கப்பெற்றது. ஆகவே முன்கூறப்பட்ட மூன்று இழுக்குகளில் இரண்டு நிவர்த்தியாயின; குலைந்திருந்த மிஷன் அம்சங்கள் திரும்பவும் இறுக இணைக்கப்பட்டு, ஸ்தாபனங்களை மேற்பார்வையிட வல்லமையுற்றவோர் ஒழுங்கு ஏற்பட்டுவிட்டது; இரண்டாவதாக, சுதேசிகள் பலர் இப்பொழுது மிஷன் சங்கத்தில் அங்கத்தவராயிருந்தனர். எனினும் மிஷனும், சபாசங்கமும் இன்னும் வெவ்வேறாயிருந்தன. சபை ஐக்கிய இயக்கம் அநுகூலமடைந்து யாழ்ப்பாண ஆதீனம் 1947 இல் ஏற்பட மிஷனும் சபாசங்கமும் ஒன்றாயின.

# சபைகளின் முன்னூட் சங்கங்களும், தென்னிந்திய ஐக்கிய சபையின் யாழ்ப்பாணச் சபாசங்கமும்

முன் குறிக்கப்பட்டதுபோல் இலங்கை அமெரிக்க மிஷனில் வட்டுக்கோட்டைச் சபை மாத்திரமே 1831 ஆம் ஆண்டுவரை சபையென அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பிரத்தியேகமான ஐந்து சபைகள் அங்கீகரிக்கப்பட்டபோது, அவைகளின் ஆவிக்குரிய நன்னிலையை வளர்க்க "கொன்சோசியேஷன்" என்னும் ஒரு சங்கத்தை மிஷன் நிறுவியது; 1838 இல் இதன் பெயர் "பெறஸ்பிற்றறி" என மாற்றப்பட்டது. இச் சங்கங்கள் மார்க்க விஷங்களை ஆராயவும், அங்கத்தவர் கலந்துரையாடவும் தருணங்கள் கொடுத்தனவேயன்றி எவ்வகையான அதிகாரமு மற்றன. 1866 ஆம் ஆண்டில் மிஷன் தனது 50 ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிய பொழுது "சபா சங்கம்" என்றொரு சமாசத்தை ஏற்படுத்தியது. இதிற் போதகர்மாரும் பிரதிநிதிகளும் அங்கத்தவராயிருந்தனர். இச் சமாசம் சபையறிக்கைகளைக் கேட்டது; குரு அபிஷேகத்திற்குப் பொறுப்பாயிருந்தது; சபை வேலைகளையும் ஆவிக்குரிய விஷயங்களையிட்டும் தர்க்கம் நடத்தியது; ஆனால் வேறு அதிகாரமற்றது.

1904 ஆம் ஆண்டு "இலங்கைக் கொங்கிறிகேசனல் சங்கம்" நிறுவப்பட்டது. அதன் ஆதாரப் பிரமாணங்கள் மே மாதம் 20 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டன. சபைகள் சுயாதீனமுள்ளவையாய்ப் பாராட்டப்பட்டபடியால், இச் சங்கத்திற்குள் அவை வரலாம், விடலாம்; 15 சபைகளின் பிரதிநிதிகள் அன்று சமுகங் கொடுத்திருந்தனர். அவர்களில் ஒருவரைத் தவிர மற்ற எல்லாரும் சங்கத்தின் ஆதாரப் பிரமாணங்களுக்குச் சம்மதங் கொடுத்தனர். காலம் செல்லச் செல்ல எல்லாச் சபைகளும் சேர்ந்தனர். இந்தச் சங்கம் ஏற்பட்டதினால், முன்னர்

நிழலாட்டமாய்த் தோற்றிய நம் சுதேசிகள் இப்போ திட ரூபம் கொண்டு தாமே காரியங்களைச் செய்யத் தொடங்கி னர் என்பது விளங்கும்.

நமது நாட்டில் இது நடந்து கொண்டிருக்க, தென் இந்தியாவில் ஒரே தன்மையுடைய இரு மிஷன்களின் சபைகள் தாம் ஓர் உடன்பாடு உண்டுபண்ணலாமென உணர்ந்தனர். நமது சங்கமும் அவைகளின் தன்மையுடை யனவாதலால் தானும் அவ் வுடன்பாட்டிற்குள் பிரவே சிக்கலாமெனத் தீர்மானித்தது. ஆகவே 1905 இல் திரு வாங்கூரிலுள்ள லண்டன் மிஷன் சபைகளும், மதுரை அமெரிக்கன் மிஷன் சபைகளும், நமது சங்கமும் ஒரு ஐக்கிய கட்டுப்பாட்டிற்குள் பிரவேசித்தனர். இவை எல் லாம் கொங்கிறிகேஷனல் சபை ஆளுகையைப் பின்பற்றி னோர். இதைக் கண்டதும் தெனனிந்தியாவிலுள்ள ஏனைய கொங்கிறிகேஷனல் சபைகள் மாத்திரமன்று, பிறெஸ்பிற் றீரியன் மிஷன் சபைகளும் தாமும் எல்லோரும் ஏன் ஒரே ஐக்கிய கட்டுப்பாட்டிற்குள் வரவியலாதென உணர்ந் தனர். ஆகவே "தென் இந்திய ஐக்கியச் சபை" ஏற்பட வந்தது. 1909 இல் நமது சங்கத்தின் பெயர் "தென் இந்திய ஐக்கிய சபையின் யாழ்ப்பாணச் சபா சங்கம்" என மாற்றப்பட்டது.

தென் இந்திய ஐக்கிய சபையின் யாழ்ப்பாணச் சபா சங்கத்தின் காலம் 37 வருடங்கள். இச் சபாசங்கம் ஏற் பட்டு நடந்தபடியால் நமது சாகியத்தில் அதிக மாற்றம் உண்டானது. அது தொடங்கும்பொழுது நமது தன்மை யொன்று, அது முடிவுக்கு வரும்பொழுது நமது தன்மை வேறு. இச் சங்க காலத்தில் குரவர் வகுப்பிலிருந்தும், அதிட்சத வகுப்பிலிருந்தும் நமக்குள் பல பிரமுகர் எழும் பித் திகழ்ந்தனர்.

இப்படி ஒரு சபாசங்கம் இருந்ததன் பொருட்டும், அதன் அலுவல்களை நடத்த வேண்டியதன் பொருட்டும் நாம் பல காரியங்களைக் கற்றுக் கொண்டோம்; அவை யாவன:

(1) நாம் வெவ்வேறு மனப்பான்மையுள்ள பிரத்தியேக மான சபைகளின் அங்கத்தவரன்று; ஒரே மனப் பான்மையுள்ள ஒரே சாகியத்தைச் சேர்ந்தவர்.

(2) யாழ்ப்பாணக் கிறிஸ்தவர்கள் தாமே பிரத்தியேக மான ஒரு குழுவன்று, எட்டுச் சபாசங்கங்களுள்ள ஒரு மகாசாகியத்தின் அங்கத்தவர்.

(3) எந்த ஒரு விஷயத்திலுஞ்சரி மிஷனரிமாரில் தங்கி யிராமல், நாமே நமது அலுவல்களைச் சிந்தித்துத் தீர்க்க வேண்டும்; தீர்ப்பது மாத்திரமல்ல, நடத்தி யும் முடிக்க வேண்டும்.

(4) நமது குடும்ப அலுவல்களைப்பற்றி மாத்திரமன்று, புறம்பான அலுவல்களையிட்டும் நமக்கு உத்தரவாத முண்டு.

(5) பண விஷயங்களை நடத்துவதில் நமது உக்கிராணத் துவம். இதைக் கற்கக் காலம் சென்றது, எனினும் ஈற்றில் கற்றோம்.

குருத்துவ பிரமுகரில் சபாசங்க அக்கிராசனராயிருந் தோரில் சிலரையிட்டுக் குறிப்பிடுவது தகும். 1917 ஆம் ஆண்டு தொடங்கி 1921 ஆம் ஆண்டில் தான் மரிக்கும் வரை சபாசங்க அக்கிராசனரா யிருந்த இளையதம்பிப் போதகர் நமது சாகியத்தில் தோற்றிய எல்லாக் குரவர்க் குள்ளும் ஒரு பெரியாரென இன்னும் மதிக்கப்படுகிறவர். இவருக்கிருந்த மதிப்பு அவர் அக்கிராசனம் வகித்த சபாசங்கத்திற்கும் ஓர் அளவிற் கிடைத்தது. அவரும் தனக்கிருந்த மேல் நோக்கங்களையே ஓர் அளவு சபாசங்க மும் கைக்கொள்ள வழிகாட்டினர். அவருக்குப் பின் வந்த கனம் ஜே. கே. சின்னத்தம்பி நிர்வாகத்திற் சிறந்தவர். ஆகவே சபா சங்கத்திற் தர்க்கம் நடக்க வேண்டியதவசிய மாயினும், அத்துடன் அதன் வேலை நின்றுவிடாமற் தற்காத்த னர். கனம் ஆர். சி. பி. உவெல்ச் இளையதம்பிப் போதகரைப் போன்றவர். உவெல்ச் போதகர் அக்கிராசனம் வகித்த காலமே தென் இந்திய ஐக்கிய சபையின் யாழ்ப்பாணச்சபாசங்கத்தின்

## தெ. இ. ஐ. யா. சபா சங்கத்தின் தலைவர் சிலர்



எஸ். இளையதம்பிப் போதகர்



ஜே. கே. சின்னத்தம்பிப் போதகர்



ஆர். சி. பீ. உவெல்ச் போதகர்



ச. குலேந்திரன் போதகர்

# தெ. இ. ஐ. யா. சபாசங்கத்தின் சில அதீட்சத பெரியார்



அலன் ஆபிரகாம்



ஜே. வீ. செல்லையா



ஜே. சீ. அமரசிங்கம்

மிகச் சிறந்த காலமெனச் சொல்லலாம். அவரில் எல்லாருக்கும் இருந்த நம்பிக்கையின் பொருட்டே சபாசங்கம் தொடக்கத்திலிருந்த ஆலோசனைச் சங்க நிலையைவிட்டு ஓர் ஆளுகைச் சங்கமாய் வந்தது. 1939 இல் சபா சங்கத்திற்கு ஓர் அக்கிராசனர் மாத்திரமல்ல, ஒரு நிர்வாக உத்தியோகஸ்தனும் தேவையென்ற உணர்ச்சி வந்தபோது உவெல்ச் போதகரே அப் பதவிக்கு நியமிக்கப்பட்டனர். சபா சங்கத்தின் சில அக்கிராசனருடைய படங்கள் எதிர்ப்பக்கத்திற் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

சபா சங்கத்திற் பல அதிட்சத பெரியார் விளங்கியு போதிலும், மூவரை மாத்திரம் இங்கே குறிப்பிடுவதையிட்டு எவரும் எங்களிற் குறை கூறமாட்டாரென நம்புகிறோம். இளையதம்பிப் போதகருடைய காலத்திற் காரியதரிசியாய் இருந்த அலெக் ஆபிரகாம் கணித சாஸ்திரத்திலும், வான சாஸ்திரத்திலும் வித்தகன். அவர் சபா சங்கக் காரியதரிசியாயிருந்ததனால் சபாசங்கம் மக்கள் கண்களில் அதிகம் மேன்மை பெற்றது. திரு. ஜே. வீ. செல்லையா கல்விமான் என்றும், நாவல்லவனென்றும் இலங்கை முழுவதிலும் பேர் பெற்றவர். தென் இந்திய ஐக்கிய சபையின் சினட் மகா சபையில் இவரே தன் காலத்தில் நமது முக்கிய பிரதிநிதியாய் இருந்தவர். மகா சபைக்கும் ஒருமுறை தலைவராக நியமிக்கப்பட்டார். தென் இந்திய சபை ஐக்கிய இயக்கத்தின் நடபடிக்கைகளை நடத்திய குழுவில் இவர் பல காலம் அங்கத்தவராயிருந்தார். திரு. ஜே. சீ. அமரசிங்கம் தெளிந்த யுக்தியும், திட்ட அபிப்பிராயங்களும், நோக்கங்களும் உடையவர். அவைகள் கைகூடும் வண்ணம் சோராமல் உழைத்தவர். 25 வருடங்கள்வரை நமது சரித்திரத்தில் காணப்படும் பெரிய காரியங்களில் கலந்து திகழ்ந்தவர்.

# தென் இந்திய திருச்சபையின்
# யாழ்ப்பாண ஆதீனம்

தென் இந்திய ஐக்கிய சபை ஏற்படுப்படி ஐக்கியத்திற்குள் வந்தவர்கள் கொங்கிறிகேஷனல் சபைகளும், பிறெஸ்பிற்றீரியன் சபைகளும். இவை ஏறக்குறைய ஒரே நம்பிக்கைகளும், வழக்கங்களும் உடையவை. எனினும் இவை ஒருங்கு சேர்ந்தபடியால் பொதுவான சபை ஐக்கியம் ஒரு வேளை வந்து கைகூடுமென்ற நம்பிக்கையேற்பட்டது. ஆனாலும் அத்தியட்ச ஆளுகையைக் கைக்கொண்ட சபைகளுக்கும், கைக்கொள்ளாத சபைகளுக்கும் மத்தியிற் பெரிய பிளப்பிருந்தது. முதல் வகுப்பைச் சேர்ந்த சபைகள் தாம் சபைகளாயிருப்பதற்கு உரித்தும், அதிகாரமும் பெற்றவையென நம்பியிருந்தனர்.

இப்பிளப்பும் நீங்கக்கூடுமெனச் சில ஆண்டுகளில் விளங்கத் தொடங்கியது. 1910 ஆம் ஆண்டு எடின்பரோ நகரில் நடந்த அகில உலக சுவிசேஷ மகாநாட்டில் எழும்பிய கருத்துக்களின் பெறுபேறாகச் சபைகள் ஒன்றுக்கொன்று பிரத்தியேகமானவையல்ல, அவை யாவும் ஒன்றாயிருக்கும் கிறிஸ்துவின் பொதுவான பரிசுத்த சபையேயன்றி வேறு அல்ல என்ற அபிப்பிராயம் பரவத் தொடங்கியது. அதனால் 1919 ஆம் ஆண்டு மே மாதம் தரங்கம் பாடியென்னும் சிறு நகரில் நடந்த ஒரு மகாநாடு தென் இந்தியாவிலுள்ள சீர்திருந்திய சபைகள் எல்லாவற்றிற்கும் ஓர் அழைப்பு விடுத்தது. அவ்வழைப்பு "லாம்பெத் நாற்கோணம்" என்ற நிபந்தனைகளை ஆதாரமாகக் கொண்டால் சபை ஐக்கியம் கைகூடுமென அறிவித்தது. அந்நிபந்தனைகள் யாதெனில்; (1) பரிசுத்த வேதாகமமே கிறிஸ்தவ கொள்கைகளின் அளவுகோல். (2) கிறிஸ்தவ கொள்கைகள் அப்போஸ்தல, நைசீய விசுவாசப் பிரமாணங்களில் உரைக்கப்பட்டிருக்கின்றன, (3) கிறிஸ்த சபையின் சாக்கிரமெந்துகள், ஞானஸ்நானமும், நற்கருணையும். (4) பரம்பரை வரிசையிலுள்ள அத்தியட்சர் முறை. (இது பிரமாணங்களினால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.)

முதன், முதல் இது விஷயத்தையெடுத்துக் கையாடி ஆலோசித்தது தென் இந்திய ஐக்கிய சபையும், ஆங்கிலேய சபையும் மாத்திரமே. 1925 இல் மெதடிஸ்த சபையும் நட

அத்தியட்சரும் குருமாரும் — 1947



படிக்கைகளிற் சேர்ந்துகொண்டது. அன்றுதொட்டு அவர்களால் நியமிக்கப்பட்ட குழு விடுத்த திட்டத்தை மூன்று சபைகளின் ஆளுகைச் சங்கங்களும் ஒன்று மாறி ஒன்று 20 வருடங்களாய்த் திருத்திக்கொண்டு வந்தன. 1946 இல் 3 சபைகளும் தாம் திட்டத்தை ஏற்றுக்கொள்ள ஆயத்தமென்று தெரிவித்தன. அதனால் நான்கு ஆங்கிலேயசபை ஆதீனங்களும், 5 மெதடிஸ்த மாகாணங்களும், தென் இந்திய சபையின் 8 சபா சங்கங்களும் வரக் கூடியதாயிருந்தன.

தென் இந்திய திருச்சபை 1947 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி சென்னை பரி. யோர்ச்சு ஆசனாலயத்தில் நடத்தப்பட்ட ஓர் ஆராதனையில் உதித்தது. ஏற்பட்ட ஆதீனங்களுக்கு அக்காலம் சேவையிலிருந்த 5 ஆங்கிலேய சபை அத்தியட்சர்மார் கையிலிருந்தனர். மற்றைய ஆதீனங்களுக்குப் புதிய அத்தியட்சர்மார் அபிஷேகம்பண்ணப்பட்டனர். யாழ்ப்பாண ஆதீனத்திற்கு யாழ்ப்பாண சபாசங்க அக்கிராசனரும், நிர்வாக உத்தியோகஸ்தனுமாயிருந்த கனம் ச. குலேந்திரன் அபிஷேகம் பண்ணப்பட்டார். அக்டோபர் மாதம் 10 ஆம் திகதி ஆசனாலயமாய்த் தீர்க்கப்பட்டிருந்த வட்டுக்கோட்டை ஆலயத்தில் அவர் வேலையில் அமர்த்தப்பட்டார்.

நமது சபைகளை ஸ்தாபித்த மிஷனரிமார் கொங்கிறிகேஷனல் பிரமாணங்களைக் கடைப்பிடித்தவர்கள். ஆகவே நமது சபைகளும் அவ்வழியிலேயே நடந்தன. கொங்கிறிகேஷனல் சபையோர் அத்தியட்சர்மார் அற்றவர்கள் மாத்திரமன்று அத்தியட்ச முறைக்கு மாறானவர்கள். எனினும் 1947 இல் நாம் அத்தியட்ச முறையை எவ்வகையான மனஸ்தாபமுமின்றி ஏற்றுக்கொண்டோம்.

இது எப்படி வந்தது? கிறிஸ்த குழுக்களுக்கிடையே நாம் காணும் விகற்பங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன் ஐரோப்பாவிலுண்டான விவாதங்களினால் ஏற்பட்டவை. மிஷனரிமார் இங்கு வந்தபொழுது தமது தேசங்களிலிருந்த விகற்பங்களை இங்கு புகுத்தினது இயல்பே. ஆகிலும் இங்கே கிறிஸ்தவர்களாய் வந்தவர்கள் முன் வேறு மார்க்கங்களைத தழுவியிருந்தவர்கள்; அவர்கள் கிறிஸ்து மார்க்கத்தை ஏற்றுக்கொண்டவர்களேயன்றி வெவ்வேறு குழுக்களுக்குரிய தனித்தனித் தன்மைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே ஐரோப்பாவில் அல்லது அமெரிக்காவில் மிகப் பிரமாதமாய்த் தோற்றியிருக்கக் கூடிய மாற்றம் இங்கு சிறியதாய்த் தோற்றியது.

இதுமாத்திரமன்று அத்தியட்சர் ஒருவர் நடத்தவேண்டிய கடமைகளும் மிகப் புதிதாய்த் தோற்றவில்லை; ஏனெனில் சில வருடங்களாய் அவ்வகையான கடமைகளை நடத்தி வந்த ஓர் உத்தியோகஸ்தன் நமது மத்தியில் இருந்தார். கொங்கிறிகேஷனல் சங்கம் சபைகளுக்கு ஆலோசனை கூறும்படியாகவே ஏற்படுத்தப் பட்டிருந்த போதிலும் காலம் செல்ல சபாசங்கத்திற்குக் கூடிய அதிகாரம் இருக்கவேண்டுமென விளக்கியதெனவும், அவ்வதிகாரம் பாவிக்கப்படுவதேயாகில் சபாசங்க சார்பாய் அதைச் செய்யவேண்டிய ஒருவர் வேண்டியதாகத் தோற்றி நிர்வாக உத்தியோகஸ்தன ஒருவர் நியமிக்கப்பட்டனரெனவும். கண்டோம். ஆதீனம் உற்பத்தியாக முன்னரே தான் சபாசங்கமும் மிஷனும் ஒருங்கு சேரவேண்டுமெனவும், அப்படி ஏற்படும குழுவுக்கு நிர்வாக உத்தியோகஸ்தனுயிருக்கும் ஓர் அக்கிராசனர் வேண்டுமெனவும் தீர்க்கப்பட்டிருந்தது.

இத்தகைய கடமைகளை நடாத்துபவர் பரம்பரை அத்தியட்ச வரிசையில் இருப்பதனுல் எவ்வகையான வித்தியாசமும் ஏற்படவில்லையென்று சொல்லவியலாது. 16 ஆம் நூற்ருண்டில் நடந்த மார்க்க சீர்திருத்தத்திற்குமுன் எல்லாச் சபைகளும் அத்தியட்ச முறையைக் கைக்கொண்டன. அத்தியட்ச ஊழியம் பரிசுத்தவான்கள், இரத்தச்சாட்சிகள் விளங்கிய ஆதிச்சபையின் காலத்திலிருந்து நமக்கு வந்திருக்கிறது. எப்படியாகிலும் செய்யப்படவேண்டிய கடமைகளை இப்படிப் பண்டைய வரிசையில் இருக்கும் ஒருவர் நடாத்துவது நஷ்டமன்று.

தென் இந்திய திருச்சபையின் அம்சமாயிருப்பதனுல் நமக்கேற்படும் நன்மைகள் யாது? முதலாவது அச்சபை பல்வேறு பரம்பரைகளை யுடைய சபைகள் ஒருங்குசேர்ந்து ஏற்பட்டபடியினுல், எந்தப் பிரத்தியேகமான பரம்பரையினுலும் கட்டுப்படாமல், பொதுவாயிருக்கிற சர்வலோக திருச்சபையின் உரிமையையும் சுதந்தரிக்கிறேம். இரண்டாவதாக, நாம் ஒரு மிகச்சிறிய ஆதீனமாயினும் உலகம் எங்கும் பரவியுள்ள கிறிஸ்தசபையிலும், இயக்கத்திலும் ஒரு பாகமென்பதை முன்னிலும் அதிகமாய் உணரக்கூடியதாயிருக்கிறது.

நமது ஆதினத்தில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளில் பின் வருவன குறிக்கப்படலாம்: (1) குருமார் கையாடும் முறைகள் கிரமமாக்கப்படல். (2) கொழும்புச்சபையின் உற்

கருமகர்த்தர் சபை — 1950



பத்தி. (3) ஒரு சுவிசேஷ உத்தியோகத்தன் நியமிக்கப்படுவதும் சுவிசேஷ வேலையில் எடுக்கப்படும் தளராத கரிசனையும். (4) 1950 ஆம் ஆண்டு மதுரையில் ஏற்பட்ட பஞ்சநிவிர்த்திக்கு ஒரு கிழமையில் ரூபாய் 5,000 சேர்க்கப்பட்டது. (5) நம்மவரிற் பலர் பிறநாடுகளுக்குப் போய் உயர்தரக் கல்விபெறுவதற்குப் பெற்றதருணம். (6) முதல் மானிப்பாயிலும் பின் வட்டுக்கோட்டையிலும் நிறுவப்பட்ட அலுவகம். (7) பல சபைகள் தமது நிறைவு விழாக்களைக் கொண்டாடியது. (8) 1957 இல் மலாய்நாட்டிற்கு நல்லெண்ணத் தூதுக்கோஷ்டி அனுப்பப்பட்டமை (9) 1958 இல் நடந்த உள்நாட்டுக் கலகத்தினால் விளைந்த கஷ்டத்தை நிவிர்த்திசெய்ய ஆதீனம் நடாத்திய சேவை. (10) ஊழியருடைய இளைப்பாற்று வேதனத்தையிட்டுச் செய்யப்பட்ட ஒழுங்கு. (11) மார்க்ககல்வியையிட்டு எடுத்துக்கொண்ட நடபடிக்கைகள். (12) நமது ஆராதனைகளைக் கீழ்நாட்டு முறைகளுக்கு ஏற்க நடத்துவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட முறைகள். விசேஷமாய் நற்கருணை ஆராதனையைச் சங்கீத முறையில் நடத்துவதாலும், கருநாடக சங்கீத அறிவை வளர்ப்பதற்குச் செய்யப்பட்டுவரும் முயற்சிகளாலும்.

நமக்குவிளைந்த நஷ்டங்களில் குறிக்கப்படவேண்டியவை: (1) தீவுப்பகுதிகளில்செய்பட்ட வேலையின் வலிமைகுன்றியது. (2) 1960இல் அரசினர் நமது பாடசாலைகளை எடுத்துக் கொண்டமை.

எனினும் ஓர் ஆதீனத்தின் சரித்திரத்தில் 19 வருடங்கள் ஓர் அற்பகாலம். நாம் கடந்தது சில வருடங்கள்; நமக்குமுன்பாக இருப்பது எல்லையில்லாக் காலம். ஆகிலும் நாம் எல்லாக்காலத்தின் அதிபதியின் ஊழியக்காரராயிருக்கிறோம்; அவருடைய வேலையைச் செய்கிறோம். அவர் நம்மை வழி நடத்துவார்.

# ஐக்கிய சபையின் உலக ஊழியக் குழு

( முன்பு அமெரிக்கன் போட் என்று அழைக்கப்பட்டது )

அமெரிக்கன் போர்ட் சங்கம் 1810 இல் நிறுவப்பட்டது. அதுவே ஆங்காங்கு மிஷன்களை நிறுவுவதற்குப் பொறுப்பு உள்ளது. அது அமெரிக்க கொரங்கிறிகேஷனல் சபைகளின் சுவிசேஷ புயம். 1961 இல் அமெரிக்க கொங்கிறிகேஷனல் சபைகளும் "திருந்திய சபைகள்" என அழைக்கப்பட்ட குழுவும் ஒருங்கு சேர்ந்தபொழுது தமது பிரத்தியேகமான பெயர்களைவிட்டு "கிறிஸ்துவின் ஐக்கிய சபை" என்ற புதிய பெயரை ஏற்றுக்கொண்டது.

இச்சபை 675 — 725 அங்கத்தவருள்ள ஒரு மகாசபையால் ஆளப்படுகிறது. அமெரிக்கன்போர்ட் முன் செய்த வேலையைச் செய்யும் சங்கம் "உலக ஊழியக்குழு" என அழைக்கப்படும். இக்குழுவைப் போன்று வெவ்வேறுவேலைகள் செய்யும் இன்னும் ஏழு குழுக்களுண்டு.

இக் குழு 225 அங்கத்தவர்கள் அடங்கிய சமுதாயத்தினால் ஆளப்படுகிறது. அதன் அலுவல்களை நடத்த 48 பேருள்ள ஒரு காரியஸ்தர் சபையுண்டு. இச்சபைக்கும் ஒரு நிர்வாக சங்கமுண்டு. உலக ஊழியக் குழு வின் முக்கிய நிர்வாக உத்தியோகஸ்தனுக்கு, நிர்வாக உப அக்கிராசன ரென்ற நாமமுண்டு. தற்காலம் இப்பதவியிலிருப்பவர் அல்போர்ட் கால்ட்டன் பண்டிதர். இவருக்குக் கீழ் மூன்று பொதுச் செயலாளர் உண்டு. அவர்களில் ஒருவர் உலக மிஷன்களை மேற்பார்வையிடுவர். அவருக்குக் கீழ் வெவ்வேறு பிரிவுகளின் செயலாளர் கிரியை செய்வர். இவர்களில் ஒருவர் இந்தியா — இலங்கை அலுவல்களைக் கவனிப்பர். தற்காலம் இவ்வேலையைப் பார்ப்பது கனம் டெல்வர் மூக். இவருடனேயே நமது நடபடிக்கைகள் உண்டு.



அ. காஸ்டன்
( உலக சேவைக் குழு உப நிர்வாக
அக்கிராசனர் )



கனம் ஆர். ஏ. டட்லி
( 1944 – 1958 அமெரிக்கன் போட்
செயலாளன் )



கனம் டெல்பர் மூக்
( உலக சேவைக் குழு
இந்திய - இலங்கைச் செயலாளன் )

# PALM BEACH

( By the Sea )

&

# PALM COURT

( In Town )

**are hotels with a good address**

○

Selected by discerning travellers & tourists

○

*Particulars from :*

## JAFFNA HOTELS, Co.,

**202, Main Street,**

**Jaffna.**

VISIT

THE

JAFFNA CO-OPERATIVE STORES, Ltd.

FOR

C. W. E.

TEXTILES

AT

controlled prices against coupons

Our Motto is "Service above Self"

Tele { phones: 438, 370 & 537.
grams: "LAKSHMI" JAFFNA.

# DIAMOND HOUSE Ltd.

வைர மாளிகை லிமிட்டட்.

**Manufacturers of Modern Jewelleries**

**79, Kannathiddy — Jaffna.**

புதுப்புது டிசைன்களில்
நகைகள் உற்பத்தி செய்வோர்.

நம்பிக்கை நாணயம் நயம்
நல்ல பொருள்

உங்கள் தேவைகளுக்கு எங்களிடம் வாருங்கள்

## வைர மாளிகை லிமிட்டட்

79, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

போன் : 7036

**TEXTILE HOUSE** *Phone : 7099*

**FOR YOUR**
**NEXT CH LDREN'S**
**GARMENT**
**REMEMBER**

# TOLARAMS

**The Ready-made Garments Centre**
**in the North**

**46, MAIN STREET, JAFFNA.**

For all your requirements
OF
DRUGS, PATENT MEDICINES, INVALID FOODS,
SURGICAL INSTRUMENTS, PRESCRIPTIONS DISPENSING.

**The Medical Hall**

*Dispensing Chemists and Druggists*

224, HOSPITAL ROAD, JAFFNA. Phone: 675.

Estd. 1929 Phone 296 Grams 'Rohini'

**S. R. S. ஜவுளி மாளிகை**

(C. W. E. அங்கீகாரம் பெற்ற ஜவுளி விநியோகஸ்தர்கள்)

திருமண வைபவங்களுக்கேற்ற
இலங்கா மணிப்புரி, டிஸ்கு சாறிகளும்,
பரமாஸ்வேட்டி, சால்வை குறிவேட்டி டவல்கள் யாவும்
எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். ஆர். செல்லத்துரை

216 காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம்.

**FOR**

Sarees, Silks and Cotton Goods

— CONTACT —

**Haribax Jaidew & Sons,**

**155, K. K. S. ROAD, JAFFNA.**

# S. V. MURUGESU

**General Merchant, Govt. Contractor**
and
**Commission Agent**

**154, Hospital Road,**
**Jaffna.**

*Branches :*

*Telephone : 564*

S. V. MURUGESU, KARAVEDDY.

Murugan Rice Mill : KILINOCHCHI



*With Best Wishes*

*from*

# BLUE RIBBON HOTELS, Co.,
# JAFFNA.

*Telephone* : *7199* *Telegrams* : வயிரம

பொ. அம்பலவாணர்

நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரேட், — யாழ்ப்பாணம்.

தங்கப்பவுண் வைர நகைகள்

எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

*Branch* : **SOVEREIGN JEWELLERY STORES**

114, Sea Street, COLOMBO, 11

*T. Phone* : *5662*

FOR

**SILK SAREES**

AND

**QUALITY TEXTILES**

AND

**BRIDAL REQUIREMENTS**

AT

*COMPETITIVE PRICES*

VISIT

**MUNEER'S**

**79, 81, K. K. S. Road,**

**JAFFNA.**

# ROYAL PHARMACY

( OPPOSITE 'BUS STAND )

**HOSPITAL ROAD,**
**JAFFNA.**

- CHEMISTS
- DRUGGISTS
- DEALERS IN SPORTS GOODS

**HAS ALWAYS FOR 25 YEARS**

**Given you the best.**

*Telephone*: **672.**

# The Malayan Trading Co.

## சிங்கப்பூர் கம்பனி

**128, 130, கே. கே. எஸ். வீதி**

**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி 547 — தந்தி : ரேடிங்

இரும்பு, பித்தளை, தீந்தை

மற்றும் கட்டிடத்திற்குரிய எவ்வித உபகரணங்களும்

எம்மிடம் சகாய விலைக்குப்
பெற்றுக்கொள்ளலாம்.

# FOR HIRE

Chairs, Glasses, Trays, Ice-cream Cups, Plates, etc.

**CENTRALLY SITUATED**
**COURTEOUS SERVICE**

## BARTON MATHER,

110, MAIN STREET,
JAFFNA.

**Phone : 229.**

*For a perfect job in every field of Photography contact GNANAMS.*

**Remember be it:**

- WEDDINGS
- GROUPS (outdoor and indoor)
- CHILD STUDIES
- PASSPORTS
- PORTRAITS

## GNANAMS STUDIO

**JAFFNA.** *Phone : 7067.*

SMOKE **"SAVERIMUTHUSONS CIGARS"**

AWARDED CERTIFICATE FOR THE BEST CIGARS



AT THE INDUSTRIAL EXHIBITION IN 1933

FOR LANKA WHITE BURLEY (without Koda)
**Also we supply**
O. M. I. AND DIAMOND (with Koda)

**PATRICK SAVERIMUTHU,**
Tobacconist.
" Muthumanai,"
**Martin's Road, Jaffna.**

Grams: VITAMINS

Phone Nos: Pharmacy 396, Residence 7252

## Leading House in Jaffna

for

**Patent Medicines, Milk Foods and Groceries**

Prescriptions accurately dispensed by registered and experienced Pharmacists.

# Singapore Pharmacy

*Prop*: P. NAVARATNAM

**280/1, HOSPITAL ROAD, JAFFNA.**

*Branch*: **Kandy Road, Kilinochchi.**

Sole Distributors for BAYER AGRO Chemicals.

**FOR**

## Motor Spares and Tyres

— VISIT —

## T. N. LINGAM & SON,

**K. K S. ROAD, JAFFNA.**

*Phone : 408.*

## NUMEROUS ATTRACTIVE PATTERNS

— FOR —

IRON GRILLS, GATES,

RAILINGS ETC.

*SPEEDY WORKMANSHIP*

## RAJAN IRON WORKS

**8, Stanley Road**

( opposite Mumsaq Buildings )

**Jaffna.**

*Branch :*

( opposite Police Station )

**Anaicottai.**



# Murugan Electrical Stores

**Government Electrical Contractors**

— *DEALERS IN* —

WATER PUMPS, BATTERIES AND
ELECTRICAL GOODS.

**6/8, Stanley Road, Jaffna.**

Telephone : *7110.* Telegram : *Current.*

*For Quality Printing*

*COTNACT*

**COMMERCIAL PRESS AND STORES,**

28, 30, MAIN STREET,

**Jaffna.**

*Tel. 615*

# Always at your Service

Subhas Guest House,

*15, Victoria Road, Jaffna.*

*Phone* : 7228 *Grams* : Subhas

*Dial* : 281. *Cables* : JEWELLERS.

உத்தரவாதமுள்ள

பவுண், வைர நகைகளுக்கு

# "தங்க மாளிகை"

யாழ்ப்பாணம்.

*For Super Craftsmanship*

**VISIT**

# Lovable

# Kind

# Service




**JEWELLERS OF REPUTE**

# GOLD HOUSE

**JAFFNA.**

அமெரிக்க இலங்கை மிஷன் அச்சகம்,
மானிப்பாய்.